257
31 MAR 2022

இணை ஆணையர் (மாவ), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.ப.நாராயணன், எம்.எஸ்.சி.,

செ.மு.ந.க : 23974/2018/அ2 நாள்: 28.03.2022

பொருள் : பொதுப்பணி - வணிகவரித்துறை - சேலம் வணிகவரிக்கோட்டம் - மறைந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர் - கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசு ஆணை எண். 225, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்: 15.02.1972
2. அரசு ஆணை எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை, நாள்: 23.01.2020.
3. திரு.ச.ராபர்ட், த/பெ (லேட்) திரு.மா.சவரி என்பவரின் விண்ணப்பம் பெறப்பட்ட நாள்: 03.12.2018.
4. துணை ஆணையர் (மாவ), நாமக்கல், ந.க.573/2018/அ1, நாள்:11.12.2018.
5. கூடுதல் ஆணையர்(நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் கடித.எண்:ஒய்-3/561935/2020, நாள்:08.02.2022.

******

பார்வை 4-இல் காணும் துணை ஆணையர் (மாவ), நாமக்கல் அவர்களின் கடிதத்தின்படி உதவி ஆணையர் (மாவ), சங்ககிரி சரகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த திரு.(லேட்.) திரு.மா.சவுரி என்பவரின் மகன் திரு.ச.ராபர்ட் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி சமர்ப்பித்த விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது. மறைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரான திரு.ச.ராபர்ட் என்பவருக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பான குழு உறுப்பினர்களின் (Committee Members) கூட்ட அறிக்கையில் மறைந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதற்காக பணிநியமனம் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டது. எனவே, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக, கீழ்கண்டவாறு பணிநியமன ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | பணி நியமனம் செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|
| 1. | திரு.ச.ராபர்ட்,<br>த/பெ.(லேட்) திரு.மா.சவுரி,<br>2.2B.20, பெரியார் நகர்,<br>மேட்டூர் அணை,<br>சேலம் மாவட்டம்-636401. | ஆ2-இளநிலை உதவியாளர்<br>உதவி ஆணையர் (மாவ) அலுவலகம்,<br>மேட்டூர் வரிவிதிப்பு வட்டம். |

2. தனியாளருக்கு வழங்கப்படும் இப்பணி முற்றிலும் தற்காலிகமானது. தனியாளர் தங்களது குடும்பத்தை கடைசி வரை வைத்து காப்பாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் இப்பணி நியமனம் வழங்கப்படுகிறது.

3. தனியாளர் சமர்ப்பித்த சான்றிதழ்கள், உறுதிமொழிகள் மற்றும் பிற விவரங்கள் பிற்காலத்தில் தவறானது என உறுதி செய்யப்படின், அவரின் பணி நியமன ஆணையினை முன்அறிவிப்பின்றி இரத்து செய்ய நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

4. கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளருக்கு 19500-62000 (Level 08) என்ற ஊதிய விகிதத்தில் 19500 (Level 08 (01)) என்ற அடிப்படை ஊதியம் நிர்ணயம் செய்ய சம்மந்தப்பட்ட தலைமை அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. தனியாளர், தனக்கு பணி நியமனம் செய்யப்பட்ட அலுவலகத்திற்கு பணியேற்க வரும்பொழுது அரசு மருத்துவரிடமிருந்து உடற்தகுதிச் சான்றிதழ் பெற்று, சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**ஒம்/- ப.நாராயணன்,**
இணை ஆணையர் (மா.வ),
சேலம் கோட்டம், சேலம்.

**/ உண்மை நகல் / ஆணைப்படி/**

**நேர்முக உதவியாளர்**

**பெறுநர்:**
திரு.ச.ராபர்ட்,
த/பெ.(லேட்) திரு.மா.சவுரி,
2.2B.20, பெரியார் நகர்,
மேட்டூர் அணை,
சேலம் மாவட்டம்-636401.
**/ பதிவஞ்சல் ஒப்புகையுடன்/**

**நகல்**

1. கூடுதல் தலைமைச் செயலர் / வணிகவரி ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. ஒய்-பிரிவு, கண்பாணிப்பாளர், வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை. (மின்னஞ்சலிலும்)
3. துணை ஆணையர் (மாவ), நாமக்கல் (மின்னஞ்சலிலும்)
4. உதவி ஆணையர் (மாவ), சங்ககிரி (மின்னஞ்சலிலும்)
5. உதவி ஆணையர் (மாவ), மேட்டூர் (மின்னஞ்சலிலும்)
6. இருப்புக்கோப்பு

உதவி ஆணையர் (மா.வ) (மு கூ பொ)
மேட்டூர்.